# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.62 of 2026
Prosecution Witness No.P.W.1 (L.W.1)

| | |
|---|---|
| Name | Tmt.Sathiyakala |
| Father/Husband Name | Prakasam |
| Calling/Occupation | Head Constable |
| Age | 45 |
| Address | Viruthampet P.S., Katpadi |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.07.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது பெண் தலைமை காவலராக விருதம்பட்டு காவல் நிலையத்தில் பணிசெய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் 14.06.2023 அன்று மது விலக்கு அமலாக்க பிரிவில் பெண் தலைமை காவலராக பணி செய்தபோது அன்று காலை 11.00 மணிக்கு மது விலக்கு அமலாக்க பிரிவு ஆய்வாளர் எங்களுடன் என்னுடன் முதுநிலை காவலர் குணசேகரன், வேப்பங்குப்பம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எதிரியின் வீட்டின் பின்புறம் ஆற்றில் ரோந்து பணியில் இருந்தபோது ஒரு ஆலமரத்தின் பின்புறம் ஒரு பெண்

அமர்ந்து கொண்டிருந்தார். நாங்கள் உடனே அங்கு சென்றோம். அங்கு ஒரு வெள்ளை நிற கேனில் 5 லிட்டர் சாராயம் இருந்தது. நாங்கள் அருகே சென்ற போது குடித்து கொண்டிருந்தவர்கள் ஓடிவிட்டார்கள். விசாரிக்கும்போது அந்த பெண்ணின் பெயர் பரமேஸ்வரி என்று தெரியவந்தது. ஆஜர் எதிரிதான் அந்த பெண் என்று சாட்சி அடையாளம் காட்டினார்.

கருப்பு டியுபு 5 இருந்தது. டம்ளர் இருந்தது. பிறகு அவரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்துவிட்டோம். காவல் நிலையத்திற்கு வந்து அவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தோம். எதிரியிடமிருந்து 8 உடையாத பாட்டில்கள் இருந்தது. உடைந்த குப்பிகள் 6 இருந்தது. உடைந்த பாட்டில்களை முகர்ந்து பார்த்தோம். முகர்ந்து பார்த்தபோது எனக்கு குமட்டல் வந்தது. எதிரியை அங்கேயே விசாரித்தோம். இந்த பொருளை எங்கு வாங்கி வந்தீர்கள் என்று கேட்டோம். மகசர் எழுதி கையொப்பம் வாங்கினார்கள்.எதிரி என்னுடைய பொருள் தான் என்று ஒப்பு கொண்டார். எதிரியை கைது செய்தார்கள். என்னை ஆய்வாளர் விசாரித்தார். பணம் கைப்பற்றினார்கள் எவ்வளவு என்று நினைவில்லை. அங்கிருந்த பொருட்களை எல்லாம் எடுத்து லேப்பிற்கு அனுப்பினோம். அங்கிருந்த பொருட்களை எடுத்து கொண்டு போய் CP நம்பர் பெற்ற பிறகு அழித்துவிட்டார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொல்வது போல் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் அங்கு எதிரியை பார்க்கவில்லை என்றும் அங்கு எந்த சாரயமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.09 17:17:44 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.62 of 2026
Prosecution Witness No.P.W. 2(L.W.2)

| | |
|---|---|
| Name | Thiru.Gunasekaran |
| Father/Husband Name | Perikuzhandai |
| Calling/Occupation | Head Constable |
| Age | 41 |
| Address | Vellore North P.S. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.07.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் வடக்கு சட்ட மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 14.06.2023 அன்று காலை 11.00 மணிக்கு மது விலக்கு அமலாக்க பிரிவில் பணியில் இருந்த போது காவல் ஆய்வாளர் மற்றும் பெண் தலைமை காவலர் 3576 திருமதி. சத்யகலா என்பவருடன் மது விலக்கு சம்மந்தமாக வேப்பங்குப்பம் காவல் நிலையம் அகரம்

கிராமத்தை கண்காணிக்க சென்றபோது ஆற்றின் ஓரத்தில் ஆலமரத்தின் பின்புறம் ஒருவர் அமர்ந்து கொண்டு சுமார் 5 லிட்டர் கொள்ளவு கொண்டு ஒரு வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனிலிருந்து ஒரு வெள்ளை நிற திரவ பொருளை ஒரு பச்சை நிற டம்ளரில் அங்கு அமர்ந்து இருந்தவரிடம் ஊற்றி கொடுத்து கொண்டிருந்தார். எங்களை கண்டதும் அனைவரும் ஓடிவிட்டார். ஒரு பெண் மட்டும் பிடிப்பட்டார். அதன் பிறகு அவரை விசாரித்தபோது அவர் பெயர் பரமேஸ்வரி, க/பெ. சிவானந்தம், அகரம் கிராமம் என தெரியவந்தது.

அங்கு சுற்றி பார்த்தபோது 3 லாரி டியுப்கள் இருந்தது. அதில் 40 லிட்டர் வீதம் 120 லிட்டர் நாட்டு சாராயம் இருந்தது. பக்கத்தில் அட்ரோபின் குப்பிகள் 8 உடைந்த நிலையிலும் 6 உடையாத நிலையிலும் இருந்தது. எதிரியை கைதிற்கான காரணம் கூறி 11.15 மணிக்கு கைது செய்தோம். 11.30 மணிக்கு எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தோம். 12.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கையொப்பம் வாங்கினோம். 12.15 மணிக்கு அழித்தல் மகசர் தயார் செய்தோம். அங்கிருந்த சாராயத்தை கையில் தொட்டு முகர்ந்து பார்க்கும்போது எனக்கு கண் எரிச்சல் ஏற்பட்டது. தலை சுற்றல் ஏற்பட்டது. வாய் குமட்டல் ஏற்பட்டது. 13.00 மணிக்கு எதிரியை காவல் நிலையம் அழைத்து கொண்டு வந்துவிட்டோம்.

வழக்கு சொத்தை பொறுத்தவரையில் காவல் நிலையம் கொண்டு வர சாத்தியமில்லாததால் மாதிரிக்கு இரண்டு 750 மில்லி லிட்டர்

கொள்ளவு கொண்ட பாட்டிலில் தலா 500 மில்லி லிட்டர் எடுத்து SHO சீல் வைக்கப்பட்டது. பரமேஸ்வரி குற்றத்தை ஒப்பு கொண்டார். அதனால் வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மது விலக்கு சம்மந்தமாக நான், பெண் தலைமை காவலர் சத்யகலா ஆகியோர்கள் எந்த வாகனத்தில் எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் காவல் ஆய்வாளர் வாகனத்தில் காலை சுமார் 07.30 மணிக்கு புறப்பட்டோம். அந்த வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. 14.06.2023 அன்று ஆஜர் எதிரி சாராயம் வைத்து விற்பனை செய்தார்கள் என்று அந்த ஊரை சேர்ந்தவர்களோ அல்லது கிராம நிர்வாக அலுவலரோ புகார் எதாவது கொடுத்தாரா என்றால் இல்லை.

எத்தனை பேருக்கு வெள்ளை நிற திரவத்தை கொடுத்து கொண்டிருந்தார் என்றால் சுமார் 4–5 பேர் இருந்தார்கள். அந்த 4–5 பேர்கள் யாரையாவது பிடித்து விசாரித்தீர்களா என்றால் எங்களை பார்த்தவுடன் அவர்கள் ஓடிவிட்டார்கள். நான் சொல்வது போல் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.09 17:17:53 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.62 of 2026
Prosecution Witness No.P.W.3 (L.W.3)

| | |
|---|---|
| Name | Thiru.Chokkanathan |
| Father/Husband Name | Umapathy |
| Calling/Occupation | Scientific Officer |
| Age | 47 |
| Address | MFSL, Vellore |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.07.2026.

( Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம் வேலூரில் அறிவியல் அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 23.06.2023 அன்று நான் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது வேலூர் மது விலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண்.471/2023 வழக்கு சம்மந்தப்பட்ட 500 மில்லி லிட்டர் அளவு கொண்ட சாராய வாடையுடன் கூடிய நிறமற்ற திரவம் கொண்ட கண்ணாடி குப்பியானது நீதித்துறை நடுவர் எண்.3 வேலூர் அவர்களின் கடிதத்துடனும் சரியான முத்திரையுடனும் எங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது. மேற்படி திரவத்தினை பகுப்பாய்வு

செய்ததில் அதில் 4.4 சதவீதம் Ethyl Alcohol ம் 4.1 சதவீதம் atrophine என்ற நச்சு பொருள் கலந்திருப்பது கண்டறியப்பட்டது. இது atrophine கலந்து சாராயம் என் தெரியவந்தது. இதனை ஆய்வறிக்கை தயாரித்து இவ்வாய்வக மது விலக்கு எண்.148/2023 நாள் 24.06.2023 மூலம் அறிக்கையாக வழங்கப்பட்டது. நான் வழங்கிய **அறிக்கை அ.த.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** –இல்லை

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.09 17:18:00 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.62 of 2026
Prosecution Witness No.P.W.4 (L.W.7)

| | |
|---|---|
| Name | Thiru.Muralidaran |
| Father/Husband Name | Munusamy |
| Calling/Occupation | Formerly Inspector of Police |
| Age | 59 |
| Address | No.77/2020, New Magazine Road,<br>Vyasarpady, Chennai 600039. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.07.2026.

( Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணியில் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். மது விலக்கு அமல் பிரிவு வேலூரில் நான் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண்.471/2023 குற்ற வழக்கினை எனக்கு முன் இருந்த ஆய்வாளர் திரு. செந்தில்குமார் என்பவர் ஆஜர் எதிரியை கைது செய்து சாட்சிகள் சத்யகலா, குணசேகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தார். இவ்வழக்கின் எதிரியால் பயன்படுத்தப்பட்ட விஷ வாடையுடன் கூடிய நாட்டு சாராயத்தை பகுப்பாய்வு செய்த தடய அறிவியல் ஆய்வாளர் திரு. சொக்கநாதன்

அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். பின்பு மேற்படி எதிரியால் பயன்படுத்தப்பட்ட விஷ தன்மையுடன் கூடிய நாட்டு சாராயத்தை அருந்தினால் ஏற்படும் விளைவு குறித்து மருத்துவர் திரு.மகேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவ சான்றை பெற்றேன். அந்த மருத்துவ சான்று **அ.த.சா.ஆ. 2** ஆகும்.

பின்பு அந்த அறிக்கையின் அடிப்படையிலும் சாட்சிகளின் அடிப்படையிலும் மேலும் இவ்வழக்கில் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட சொத்தினை பகுப்பாய்விற்கு ஆஜர்ப்படுத்திய சாட்சி சத்யகலா என்பவரை மறு விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு மேற்படி சாட்சிகளின் அடிப்படையிலும் நான் பெற்ற அறிக்கைகள் அடிப்படையிலும் ஆஜர் எதிரியன் மீது 28.06.2024 அன்று குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கு சம்மந்தமாக நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் நான் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.3 சொக்கநாதன் என்பவரை விசாரித்தபோது அவர் கஞ்சாவை பகுப்பாய்வு செய்ததாக விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் வாக்குமூலத்தில் கஞ்சா என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் நாட்டு சாராயத்தில் 4.1 அட்ரோபின் உள்ளது என்று அறிக்கையில் சொல்லியுள்ளார்.

நான்சொல்வது போல் எதிரி எந்த விதமான விஷ தன்மையுள்ள சாராயம் வைத்திருக்கவில்லை என்றும் எதிரி மீது பொய் வழக்கு போட்டு சரியாக விசாரணை செய்யாமல் தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.07.09 17:18:12 +0530